# மனுவியல் - பாடம் - 4 கலாச்சார மனுவியல்

கலாச்சாரத்தைப் பற்றிய தேவனின் நோக்கு என்ன? (1 கொரி.9:19-22)

கிறிஸ்தவ வட்டாரங்களிலே கலாச்சார மானிடவியல் ஏன் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற கேள்விக்குச் சரியான பதில் என்னவெனில் கலாச்சாரத்தைப் பற்றி தேவனின் நோக்கு என்ன என்பதை ஆராய்வதாகும். இதற்குச் சிறந்த உதாரணம் 1 கொரிந்தியர் 9:19-22 வசனங்களில் பவுல் அடிகளார் தேவன் கலாச்சாரம் பற்றி வைத்திருக்கும் நோக்கையும் அத்தோடு அம்மக்கள் மத்தியில் பவுல் பணி செய்ய அணுகும் முறையையும் எடுத்துக்காட்டுகின்றது. பரிசுத்த வேதாகமத்தின் ஆரம்பத்தில் இருந்து முடிவுவரை தேவன் மானிட கலாச்சாரத்தினூடாக செயலாற்றுகின்றார் என்பதை நாம் அறியக் கூடியதாய் இருக்கின்றது.

அப்போஸ்தலர் நடபடிகளிலே புறஜாதியாரை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதைப் பவுலடியார் எடுத்துக் காட்டுகின்றார். எனவே தேவனின் பணியாளராகிய நாம் எந்த கலாச்சாரத்துக்குள் போனாலும் தேவனின் செய்தியை அக்கலாச்சாரத்திற்கூடாக எடுத்துக் கூற வேண்டும். அப்படியில்லாவிட்டால் நாம் அணுகும் மக்கள் கூட்டம் நற்செய்தியை ஒரு வேற்றுக் கண்ணுடனேயே எப்பொழுதும் நோக்குவார்கள்.

இந்த கலாச்சார மானிடவியலைப் படிப்பதால் நற்செய்திப் பணிக்குத் தடையாக உள்ள காரியங்களை நாம் சாதகமாக்கிக் கொள்ளலாம்.

கலாச்சார மானிடவியல் மேற்கத்திய நாட்டு மக்களுக்கு மட்டுமல்ல, கிழக்கத்திய மக்களாகிய நமக்கும் அவசியமானது. காரணம் என்னவெனில் நாம் மேற்கத்திய கலாச்சாரத்தில் தாக்கம் அடைந்துள்ளோம். இத்தாக்கம் நாம் அறிந்தோ, அறியாமலோ திருப்பணி செய்யப்போகும் இடங்களில் பல பாதிப்புகளை ஏற்படுத்தலாம். இவற்றைக் கருத்திற்கொண்டு கலாச்சார மானிடவியல் என்னும் பாடத்தை ஊக்கமாய்க் கற்றுக்கொள்ள நம்மை அர்ப்பணிப்போம்.

## கலாச்சார மானிடவில் (மனிதவியல்) கற்றுக் கொள்வதால் நாம் அடையும் நன்மைகள்

1. **கலாச்சார மனிதவியல் மக்கள் என்ன (செய்கின்றார்கள்) என்ன சிந்தையுடன் நடக்கின்றார்கள் என்பதை அறிதல்.**

கலாச்சார மனிதவில் மக்கள் மத்தியிலே நாள்தோறும் நடைபெறும் காரியங்களை ஆராய்கிறது. உதாரணமாக, அவர்களுடைய அனுதின,

1) வேலைகள்
2) பிள்ளைப் பராமரிப்பு
3) சடங்காச்சாரங்கள்
4) விளையாட்டுக்கள்
5) கைப்பணிகள்
6) சமயம்

ஆகிய இவைகளை உற்று நோக்கும்போது மக்கள் என்ன செய்கின்றார்கள், என்று பெறப்படும் பேறுகளே கலாச்சார மானிடவியலுக்குச் சிறந்தவழி காட்டியாகின்றது.

2. **காலாச்சார மானிடவியல் எப்பொழுதும் மேற்கத்திய தேச மக்கள் அல்லாத கிழக்கத்திய மக்கள் கலாச்சாரத்துடன் தொடர்பு கொள்கின்றது.**

மேலேத்தேச நாடுகளில் இருந்து பல தத்துவப் படிப்புகளைக் கற்றறிந்தவர்கள் எப்பொழுதும் இன்னுமொரு கலாச்சாரத்தை அளவிடும் அல்லது மதிப்பிடும்பொழுது மேற்கத்திய தேச கலாச்சாரத்துடன் தான் ஒப்பிட்டுப் பார்ப்பார்கள். ஆனால் நாளடைவில் கிழக்கத்திய தேசங்களில் உள்ள கலாச்சாரம் ஒவ்வொன்றிற்கும் ஒரு தனித்துவம் இருக்கின்றது என்று எப்பொழுது அறிந்தார்களோ, அன்றிலிருந்து இன்றுவரை கலாச்சார மானிடவில் அநேக நன்மையான காரியங்களைக் கண்டு பிடிக்கின்றது.

1. மேற்கத்திய தேச கலாச்சாரம், ஏனைய கலாச்சாரங்களை ஒப்பிட்டுத் தங்களுடைய கலாச்சாரம் மேன்மையானது என்று சொல்லும் மனப்பான்மையினால் கிழக்கத்திய தேச கலாச்சாரத்தில் ஒரு தாழ்வு மனப்பான்மை ஏற்ப்பட்டது.
2. மேற்கத்திய தேச கல்வி முறைகளினாலும், அவர்கள் இலக்கியங்களினாலும், காலணித்துவ ஆட்சியினாலும், வியாபாரங்களினாலும், இந்த கிழக்கத்திய

தேச கலாச்சாரத்தில் ஒரு தாக்கம் உண்டாகியுள்ளது. ஆனால் தற்காலங்களிலே மேற்கத்திய தேச சா்வ கலாசாலைகளிலே கிழக்கத்திய தேச சரித்திரம், கலாச்சாரம் பற்றிக் கற்றுக் கொடுக்கப்படுகின்றது. இதன் விளைவாக கிறிஸ்தவப் பணி விருத்தியடைகின்றது.

**3. கலாச்சார மானிடவில் ஒவ்வொரு கலாச்சாரத்திற்கும் உரிய சிறப்புத் தன்மைகளைச் சரியாகப் புரிந்துகொள்ள உதவுகின்றது "Culture Concept"**

கலாச்சார மானிடவியல் ஒவ்வொரு கலாச்சாரத்தின் அடிப்படைத் தத்துவங்களையும் சரியாகப் புரிந்துகொள்ள உதவி செய்வதால் திருச்சபையின் திருப்பணிக்கும், வேதமொழி பெயா்ப்புக்கும், பெரிதும் பங்களிக்கின்றது. அதன் பயனாக ஒரு கலாச்சாரம் இன்னொரு கலாச்சாரத்தை விட மேன்மையானதல்லவெனக் கருதப்படுகின்றது. எனவேதான் தற்காலங்களில் மிஷனரிமார்களின் பணியில் "எங்கள் கலாச்சாரம் மேலானது உங்கள் கலாச்சாரம் கீழானது" என்ற சொல்லுக்கு இடமேயில்லை.

**4. கலாச்சார மானிடவியல் ஒரு மனிதனை அல்லது ஒரு கூட்டத்தை முழுமையாகப் பார்க்கின்றது (Wholistic View)**

உலகத்தில் இருக்கும் ஏனைய பாடங்கள் மனித வா்க்கத்தை ஆராய்ந்து படிக்கும்பொழுது ஒரு குறிப்பிட்ட பகுதியை மட்டுமே ஆராய்கின்றது. ஆனால் கலாச்சார மானிடவில் மனிதனின் முழு நடத்தையையுமே ஆராய்ந்து படிக்கின்றது. எனவேதான் கிறிஸ்தவ பணியாளா்களுக்கு கலாச்சார மானிடவியல் கற்பிக்கப்படுகின்றது.

**5. கலாச்சார மானிடவியல் என்பது ஒரு மனித நோக்காகும்.**

இது ஒரு பாடம் அல்ல. உலகத்திலே பல பாடங்களை நாம் கற்றுக்கொள்கின்றோம். ஆனால் கலாச்சார மானிடவியல் என்பது ஒர மனித கூட்டத்தின் அனுதின செயல்களை அனுபவ முறையில் படிப்பதாகும். எனவேதான் கலாச்சார மானிடவியலில் எல்லா கலாச்சாரத்தையும் அறிந்து ஒரு பொதுவான விளக்கத்தைக் கொண்டு வர முடிகின்றது. மேற்கத்திய தேச கலாச்சாரம் என்றும், கிழக்கத்திய தேச கலாச்சாரம் என்றும், இவைகள் ஒன்றையொன்று எப்படி அணுகலாம் என்பதற்கும் விசேஷமாக கிறிஸ்தவ திருப்பலியைச் செய்வதற்கும்

இந்த நோக்கு முக்கியமானதாகும். பரிசுத்த வேதாகமத்தில் திருப்பணியைப் பற்றி வாசிக்கும்போது, தற்கால உலகிலே இருக்கும் கலாச்சாரங்களின் நடைமுறைகளை ஒப்பிட்டு நாம் விளக்கம் காணக் கூடியதாக இருக்கும்.

6. **கலாச்சார மானிடவியல் எப்பொழுதும் ஒரு தொடர்பு சாதனமாக அமைகின்றது.**

கலாச்சார மானிடவியல் நற்செய்தியை மற்றவர்களோடு தொடர்புபடுத்திக் கொள்ள ஒரு பங்களிப்பை ஏற்படுத்திக் கொடுக்கின்றது. நற்செய்தி ஊழியராகிய நாம் யாரிடம் போகின்றோம், எந்த மக்கள் கூட்டத்தை சந்திக்கின்றோம், என்பதைச் சரிவரப் புரிந்து கொள்ள வேண்டும். பின்பு தேவனின் செய்தியை சிறந்த முறையில் அக்கூட்டம் புரிந்துகொள்ளும் வகையில் நாம் பகிரலாம். இன்று உலகில் கிறிஸ்தவ நற்செய்தியை சிலர் ஏற்றுக் கொள்கின்றனர். இன்னும் சிலர் தள்ளி விடுகின்றனர். இதில் பெரும்பாலாக இருக்கின்ற உண்மை என்னவென்றால் மக்கள் தங்கள் கலாச்சார பின்னணிக்கு ஏற்ப விளங்கிக் கொள்ளாமையால் தள்ளி விடுகின்றனர்.

7. **கலாச்சார மானிடவியல் சமுதாயத்தில் உள்ள சில நடைமுறைகளுக்கும் கருத்து விளக்கங்களைக் கொடுக்கின்றது.**

எங்களுடைய கிறிஸ்தவ திருச்சபைகளில் நடைமுறையிலிருக்கும் ஞானஸ்நானம், திருவிருந்து, பிரசங்கம், இவையனைத்தையும் இன்னுமொரு கலாச்சாரத்துக்குள் பிரயோகிக்க வேண்டுமானால் நாம் அந்த கலாச்சார பழக்க வழக்கங்களை அறிந்துகொள்ள வேண்டும். பின், அந்தச் சூழலுக்குத் தக்கதாக இக்குறிப்பிட்ட காரியங்களை, அம்மக்கள், பரிசுத்த காரியங்கள், என்று அறியும்படி அவர்களுடைய நிலைமைக்குத் தக்கதாகச் செயல்படுத்த வேண்டும். எனவே தான் கலாச்சார மானிடவியல் இவற்றிற்கு உதவியளிக்கின்றது. இந்த நடைமுறைகளை ஒரு கிறிஸ்தவப் பணியாளன் சரியாக அறிந்திருத்தல் வேண்டும்.

8. **கலாச்சார மானிடவியல் ‘உலகநோக்கு” (World View), எல்லா கலாச்சாரத்திலும் உள்ள உலக நோக்கு என்ற காரியத்தை அபிவிருத்தி செய்து வருகின்றது.**

உலகத்திலே ஒரு மனித சமுதாயத்திற்கு முக்கியமாக மூன்று காரியங்கள் கலாச்சாரத்தில் இருக்கின்றன.

1) மனித ஜீவியத்திலே இருக்கும் மதிப்பீடுகள்.
2) அவர்கள் பின்தொடரும் சமய நம்பிக்கைகள்.
3) இவற்றை தங்கள் நடைமுறையிலே காண்பித்தல்.

**9. கலாச்சார மானிடவியல் கிறிஸ்தவ ஊழியர்களுக்கும், அவர்களுடைய பணிகளுக்கும் உதவி செய்து வருகின்றது.**

எந்த கலாச்சாரத்திலும் ஒரு கிறிஸ்தவ திருப்பணியாளர் பணியாற்றக் கூடியதாகக் கலாச்சார மானிடவியல் உதவுகின்றது. முதலாவது ஒரு திருப்பணியாளர் ஒரு கலாச்சாரத்தை உற்று நோக்கி அதிலே பங்கெடுக்கின்றான். கலாச்சார மானிடவியல் கூறுகின்றபடி ஒரு பணியாளன் ஒரு மக்கள் கூட்டத்தைப் பற்றிப் படிக்க வேண்டுமாயிருந்தால் அவன் முதல் செய்ய வேண்டிய காரியம் அவன் உற்று நோக்கும் பார்வையாளனாக இருக்க வேண்டும். மக்களுடன் ஜீவித்து அவர்களின் மொழியை கற்றுக்கொள்ள வேண்டும்.

பல்வேறுபட்ட கலாச்சாரத்தில் கிறிஸ்தவ நற்செய்தியை மக்கள் கருத்தோடு விளங்கக் கூடிய முறையிலே கலாச்சார மானிடவியல் உதவியளிக்கின்றது. முக்கியமாக அந்தக் காலாச்சாரத்தில் உலக நோக்கு என்ன என்பதை கலாச்சார மானிடவியல் படித்தவர்கள் முற்றுமாக அறிந்து கொள்கின்றனர். இதன் விளைவாக மக்களுக்கு விளங்கக் கூடிய முறையில் நற்செய்தி பகிரப்படுகின்றது.

**10. கலாச்சார மானிடவியல் கலாச்சார மாற்றங்களை எளிதில் அறிந்து கொள்கிறது.**

கலாச்சார மாறுதல் அடிக்கடி நடைபெறுகின்றது. இதனை நாம் பத்திரிக்கைகளிலும் கூட வாசிக்கின்றோம். ஒரு கலாச்சாரத்திலே காலத்திற்கு காலம், மாற்றமேற்பட்டு வருகின்றது. இம்மாறுதல்கள் ஏற்படும்பொழுது எப்படி, என்ன வழியில் ஏற்பட்டது என்பதனை அறிய கலாச்சார மானிடவியல் அறிவு நமக்கு உதவுகின்றது.

கிறிஸ்தவ சாட்சி பகரும் ஜீவியத்திற்கும், நாம் பணிபுரியும் கலாச்சாரத்திற்கும் இடையில் சில மாற்றங்களைக் காண்கின்றோம். இம்மாற்றங்கள் வரும்போது நம் சாட்சி பகிரலில் அம்மாற்றங்களுக்கு ஏற்ற அணுகும் முறைகள் வேண்டும். ஒரு இடத்திலே, ஆரம்ப காலத்திலே கலாச்சாரத்தின் அஸ்திவாரத்திலே கட்டப்பட்ட கிறிஸ்தவ நடைமுறையை நாம்

மாற்ற வேண்டியிருந்தால் அக்கலாச்சாரத்தை தூக்கியெடுத்து ஓர் இரவுக்குள் மாற்றிவிட முடியாது. ஆனால் கலாச்சார மாறுதலுக்கு ஒப்பாக நாம் செயற்பட வேண்டும்.

எனவே ஏற்கனவே நாம் பார்த்த பத்து காரணங்களும் நமது கிறிஸ்தவ திருப்பணியில் உள்ள கலாச்சார மனிடவியல் பற்றிய உண்மைகளாகும். பின்வரும் மூன்று பகுதிகளிலே அவற்றை நாம் விருத்தியடையச் செய்யலாம்.

1. நாம் பணி செய்யும் மக்கள் கூட்டமும் அவர்கள் கலாச்சாரமும்.
2. ஜனங்களுடைய கலாச்சாரத்திலே நாங்கள் எவ்வகையில் நடந்து கொள்கிறோம்.
3. வேதாகம கலாச்சாரத்தையும் அது தரும் செய்தியையும் நாம் எப்படிப் பகிர்ந்து கொள்ளலாம்.

## கேள்விகள்:

1. கலாச்சாரத்தைப் பற்றிய கடவுளின் நோக்கம் என்ன என்பதனைக் கூறுக?
2. கலாச்சார மானிடவியலை நாம் கற்றுக் கொள்வதினால் நமக்கு கிடைக்கப்பெறுகிற பத்து நன்மைகளை வரிசைப்படுத்தி சற்று விளக்கமாக கூறுக?
3. கலாச்சார விரிவாக்கம் எவ்வாறு நடைபெறுகிறது என்பதனை இப்பாடத்தில் கற்றுக்கொண்டவைகளிலிருந்து எழுதுக?